தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விண்ணப்பங்கள் மற்றும் பிற கட்டணங்கள் – பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்ட, பட்ட மேற்படிப்புகளில் சேரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்க்கு சேர்க்கை/பதிவு கட்டணங்கள் விலக்களித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை

அரசாணை (நிலை) எண்.111, நாள் 22.9.98

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.69, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 17.4.97.
2) அரசு தே.மு.க.எண்.580/ஆதிந.3/97-1, நாள் 28.1.98.
3) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பதிவாளரின் கடிதம் எண்.ச4/சேர்க்கை 98-99/ விண்ணப்பக் கட்டணம் நாள் 1.4.98.
4) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் எண்.ம1/5337/98, நாள் 12.5.98.

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்ற தொழிற்கல்வியில் சேர்வதற்கான விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் செலுத்த வேண்டியதில்லை என ஆணையிடப்பட்டது.

2) பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் எந்தவொரு விண்ணப்பத்திற்காகவும், பதிவிற்காகவும் பட்டியல் இனத்தவர்/பழங்குடி வகுப்பினரிடமிருந்து கட்டணம் வசூலிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டது.

3) பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நுழைவுத் தேர்வு விண்ணப்பத்திற்கான கட்டணம் மட்டுமே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது எனவும், சேர்க்கைக்கான விண்ணப்பம் அச்சிடப்பட்டு வருவதாகவும், அவ்விண்ணப்பத்திற்கான கட்டணம் பொதுப்பிரிவு மாணவர்களுக்கு ரூ.150/-ம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ.75/-ம் கடந்த வருடம் நிர்ணயம் செய்த அளவில் இவ்வருடமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்து பார்வையில் [illegible] அரசாணையில் வழங்கப்பட்ட விண்ணப்பக் கட்டணச் சலுகையை பட்டம், பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்க்கான சேர்க்கை விண்ணப்பக் கட்டணத்திற்கும் நீடிக்கலாமா எனவும், இதனால் ஏற்படும் பண இழப்பை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பின்னர் ஈடு செய்யுமா? அல்லது கடந்த வருடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தையே இந்த வருடமும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடமிருந்து வசூல் செய்யலாமா? என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளரும், பட்டியல் இனம்/பழங்குடியின மாணவ, மாணவியர் [illegible] படிப்புகளுக்கான சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் கட்டணம் [illegible] வேண்டுமென ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

4) மத்திய அரசு அமைச்சகத்தினால் பத்தாம் வகுப்புக்கு மேற்பட்ட [illegible] வழிகாட்டியின் பத்தி 5ல் குறிப்பு 4/3ல் "சேர்க்கை/பதிவு, விளையாட்டு, மாணவர் சங்கம், நூலகம், [illegible], [illegible]

[illegible] மாக செலுத்தப்பட வேண்டிய [illegible] /பல்கலைக்கழகத்திற்கு/காரியத்திற்கு மாணவர் [illegible] செலுத்தப்படும். காப்புத்தொகை, காப்புநிதி வைப்பு போன்ற திருப்பித்தரப்படும் வைப்புகள் மட்டும் தரப்படா" என விளக்கப்பட்டுள்ளது. 1.4.98 முதல் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.50,920/-க்கு [illegible] மட்டுமே பெற மாணவர்கள் தகுதி வாய்ந்தவர்களாவர்.

5) நுழைவு/படிப்புக் கட்டணங்கள் மைய அரசு கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையுடன் திருப்பித் தரப்படுவதால் பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்ற தொழிற் கல்வியில் பட்டம் மற்றும் பட்டமேற்படிப்புகளில் சேரும் ஆதிதிராவிடர் & பழங்குடியினர் மாணவர்களுக்கு 1999-2000 முதல் [illegible] விலக்களித்து அரசு ஆணையிடுகிறது. இதனால் ஏற்படும் பண இழப்பினை, மத்திய அரசிடமிருந்து மாணவர் பெறும் கல்வி உதவித்தொகையிலிருந்து கல்வி நிலையங்கள் [illegible] கொள்ள வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

6) மத்திய அரசு கல்வி உதவித்தொகை பெற தகுதியற்ற பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வியில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்றவற்றில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்புகளில் சேரும் ஆதிதிராவிடர் & பழங்குடியினர் மாணவர்களுக்கும் நுழைவு/படிப்புக்கான கட்டணங்களை செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது. இதனால் ஏற்படும் பண இழப்பை கல்வி நிலையங்கள் தொடர்புடைய துறை இயக்குநர்கள் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

7) மேலே பத்தி 6ல் அளிக்கப்பட்டுள்ள சலுகையின் மூலம் ஏற்படும் கூடுதல் செலவினத்தை 1999-2000ஆம் ஆண்டின் திருத்த-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்க தொடர்புடைய கல்வித் துறையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் முன்மொழிய வேண்டும்.

8) இவ்வாணையினைத் தவறாது கடைபிடிக்கவும், விளம்பரங்களிலும், தகவல் தொகுப்பேட்டிலும், தெளிவாகக் குறிப்பிட அனைத்துக் கல்வி நிலையங்களை அறிவுறுத்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்/கல்லூரிக் கல்வி இயக்குநர்/தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்/மருத்துவக் கல்வி இயக்குநர்/சட்டக்கல்வி இயக்குநர்/வேளாண்மை பல்கலைக்கழகப் பதிவாளர் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பதிவாளர் ஆகியோர் தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

9) இவ்வாணை அ.சா.கு.எண்.2050/நிதி செயலர்/ப்பி/98, நாள் 1.6.98ல் வழங்கப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ரத்தினசாமி,
அரசு செயலாளர்

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5.
அரசு செயலர், உயர்கல்வி/கால்நடை(ம) மீன்வளத்துறை/வேளாண்மைத்துறை/சுகாதாரம்(ம) குடும்ப நலத்துறை, சட்டத்துறை, சென்னை-9.
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-5./சட்டக் கல்வி இயக்குநர், சென்னை-35.
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர், கோயம்புத்தூர்.
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர், சென்னை-7.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் - இப்போதைய கல்வி தொடர்பான ஆணைகளை அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலர்/மாவட்ட கல்வி அலுவலர்/உதவிக்கல்வி அலுவலர்/கல்லூரி மண்டல இயக்குநர்/[illegible] நிலையங்களுக்கும் அவர்கள் அனுப்ப வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்.
[illegible] நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் & பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் & பழங்குடியினர் நலச்செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் & பழங்குடியினர் நலத்(ஆதிந)துறை, சென்னை-9/இருப்புக்கோப்பு/உதிரிகள்

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது./

[illegible]